யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

**தவணைப் பரீட்சை, யூன்- 2015**

**Term Examination, June - 2015**


| தரம் :- 13 (2015) | தமிழ் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும் பகுதி II இன் ‘அ’ பகுதியிலிருந்து ஒரு வினாவையும் ‘ஆ’ பகுதியிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- ❖ முதலாம் வினாவின் ‘அ’ பகுதியிலுள்ள இருபது வினாக்களுக்கும் அவற்றுக்கான விடைகளை இத்தாளிலேயே எழுதுதல் வேண்டும்.

## பகுதி - I

01) (அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

i) பின்வருவனவற்றுள் உதட்டுப் பல்லுயிராக அமையும் எழுத்து
1) ம 2) ப 3) வ
4) ஈ 5) த (.......)

ii) ‘க’ கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1) கடன் 2) பற்கள் 3) பக்கம்
4) சங்கம் 5) முட்கள் (.......)

iii) கெடுதல் தோன்றல் விகாரங்கள் இடம்பெற்றுப் புணர்ந்த சொல்
1) மாவிலை 2) மரப்பலகை 3) பழமரம்
4) மணியோசை 5) மலர்க்கொடி (.......)

iv) படி என்பது பெயராக அமைந்த தொடர்
1) கறை படிந்த வாழ்க்கை 2) படியளந்த பெருமான்
3) படிந்த பனித்துளி 4) படித்த மனிதன்
5) படிக்காத மேதை (.......)

v) ஊரவர் என்ற சொல் உடைமைப் பொருள் வேற்றுமை ஏற்று வந்த வாக்கியம்
1) அவன் ஊரவரை வெறுத்தான்
2) அவன் ஊரவரால் வெறுக்கப்படான்
3) அவன் ஊரவர் விருப்பத்திற்குரியவனானான்
4) ஊரவர் அவனது வெறுப்பிற்கு உரியவராயினர்
5) ஊரவர் அவனைப் போற்றினர் (.......)

vi) காலம் காலமாக படித்தவர்களும் தவறு செய்கின்றனர். இங்கு படித்தவர் என்பது
1) தொழிற் பெயர் 2) ஆக்கப் பெயர் 3) வினையாலணையும் பெயர்
4) காரணப்பெயர் 5) சினைப் பெயர் (.......)

vii) பின்வருவனவற்றுள் முன்னுயிர்களைக் கொண்ட எழுத்துத் தொகுதி
1) அ, ஆ. இ 2) இ, ஈ, உ 3) இ, ஈ. எ
4) எ, ஏ, ஐ 5) ஒ, ஓ, ஏ (.......)

The National e-learning Portal for The General Education

viii) நான் என்னிடமிருந்த கொஞ்சப் பணத்தையும் செலவழித்து விட்டேன். இதில் கொஞ்சம் என்பது

1) எண்ணுப் பெயர் 2) அளவுப் பெயர் 3) மாற்றுப் பெயர்
4) ஆக்கப் பெயர் 5) பண்புப் பெயர் (.......)

ix) தெருவால் நீ போனதைக் கண்டேன். இதில் போனது என்பது

1) வினைமுற்று 2) வினையாலணையும் பெயர்
3) தொழிற் பெயர் 4) படர்க்கைப் பெயர்
5) அஃறினை வினைமுற்று (.......)

x) 'ன்' என்ற இடைநிலை அமையப்பெற்ற சொல்

1) போனேன் 2) போயினேன் 3) போயினர்
4) போயின 5) போயினாய் (.......)

xi) பின்வருவனவற்றுள் எதிர்மறைப் பெயரெச்சம்

1) வாடாது 2) வாடாதே 3) வாடாமல்
4) வாடாத 5) வாடாமை (.......)

xii) சங்கீதம் நம் உள்ளங்களை கட்டுப்படுத்துகின்றது.

1) செய்வினை 2) செயப்பாட்டு வினை 3) காரணவினை
4) பிறவினை 5) செயப்படுபொருள் குன்றிய வினை வாக்கியம்

எனக் கொள்ளலாம். (.......)

xiii) பின்வருவனவற்றுள் வினைத்தொகையாகவும் உவமைத் தொகையாகவும் வரக்கூடிய சொல்.

1) துடியிடை 2) மதிமுகம் 3) மதிக்குளிர்
4) மலர்விழி 5) சுடுசொல் (.......)

xiv) பின்வருவனவற்றுள் விடு துணை வினையாக வந்துள்ள தொடர் எது?

1) கண்டுவிட்டேன் 2) கைவிட்டேன் 3) விடுவேனா
4) கருதிவிட்டேன் 5) விடமாட்டேன் (.......)

xv) பின்வருவனவற்றுள் ஆல் என்பது நிபந்தனைப் பொருளாக வந்துள்ள சொல்

1) வருவதால் 2) அரசனால் 3) வந்தால்
4) பெருமையால் 5) கூறுவதால் (.......)

xvi) பின்வருவனவற்றுள் 'தோறும்' எனும் இடைச்சொல் இணைந்து வரமுடியாத பெயர்ச் சொல்

1) இலங்கை 2) தினம் 3) ஊர்
4) நாடு 5) வருடம் (.......)

xvii) பின்வருவனவற்றுள் - ஆவது என்னும் இடைச்சொல் இணைப்பிடை சொல்லாக வந்துள்ள தொடர்

1) நீயாவது செய் 2) அவனையாவது வரச்சொல்
3) கோப்பி பாலாவது குடியுங்கள் 4) பத்து ரூபாயாவது வேண்டும்
5) நீயாவது அப்பாவாவது வரவேண்டும் (.......)

xviii) யாதும் ஊரே யாவரும் கேளிர் - இதில் வரும் ‘உம்’ இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எச்சம் 2) முற்று 3) தெரிநிலை
4) ஆக்கம் 5) இணைப்பிடைச் சொல் (.......)

xix) சமன் வாய்ப்பாட்டு வாக்கியம் என்பது

1) ஒரு எழுவாய் மட்டும் கொண்ட வாக்கியம்
2) எழுவாய் பெயராகவும் பயனிலை பெயராகவும் அமைதல்.
3) எழுவாய் பெயராகவும் பயனிலை வினையாகவும் வருதல்.
4) பெயரடையைப் பெற்றுவரும் வாக்கியம்.
5) பெயரடையும் வினையடையும் பெற்று வரும் வாக்கியம் (.......)

xx) அல்ல என்னும் எதிர்மறை வினை எத்தகைய வாக்கியங்களில் எதிர்மறைப் பொருளை உணர்த்தும்?

1) பெயர்ப் பயனிலை கொண்ட வாக்கியம்
2) வினைப் பயனிலை கொண்ட வாக்கியம்
3) தோன்றா எழுவாய் கொண்ட வாக்கியம்
4) ‘உம்’ இடைச்சொல் பெற்ற கூட்டு வாக்கியம்
5) முற்று வாக்கியத் தொடர் (.......)

(20 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

i) தன்மைப் பெயர்கள் இரண்டினைத் தந்து அவை வேற்றுமை உருபு ஏற்கும் போது அடையும் மாற்றங்களை விளக்குக.

ii) ஏவல் வினைக்கும் வியங்கோள் வினைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

iii) வேற்றுமைத் தொகையை உதாரணந் தந்து விளக்குக.

iv) கிளி + கூடு, பசு + பால் என்பன இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு ஒவ்வொரு உதாரண வாக்கியம் தருக.

v) பின்வரும் வாக்கியத்தில் இணைந்துள்ள நான்கு வாக்கியத் தொடர்களை எடுத்துக் காட்டுக.
நாகம்மாள் நேராக வீட்டிற்கு வந்ததும் சாவியை எடுத்து மளமளவென்று பூட்டைத் திறந்து உள்ளே போனாள். (10 புள்ளிகள்)

02) (அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

தமிழ் நாட்டை ஆண்டோர் பரம்பரை வழியில் வருகின்ற அரசராவர். சேர, சோழ, பாண்டியர் என்னும் பெருநில மன்னரும், இவரது ஆணைக்கு உட்பட்டும் சில சமயங்களில் ஆணைக்கு உட்படாது மிகுந்த சிற்றரசர் பலரும் தமிழ் நாட்டை ஆட்சி புரிந்தார்கள். தமிழ் நாட்டு மூவேந்தர் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டனர். மக்கள் அப்போர் ஆரவாரங்களுக்கிடையில் வாழ்ந்தனர். நகருக்கு தொலைவில் வாழ்ந்த கிராம மக்கள் அயலேயுள்ள குறுநில மன்னரால் அடிக்கடி தாக்கப்பட்டு துன்பத்துக்குள்ளாயினர். அவர்களது ஆடு, மாடுகள் கொள்ளையடிக்கப்பட்டன. நகரத்தில் வாழ்ந்தவர்களுக்கு பேராபத்து ஏற்படவில்லை. மதியால் அரண் செய்யப்பட்ட நகர்கள் பகையரசரால் எளிதில் தாக்க முடியாமல் இருந்தன. அரசனது அதிகாரம் ஐம்பெரும் சபைகளால் கட்டப்பட்டிருந்தது. மக்களின் சார்பாளராகிய நகர மாந்தர், புரோகிதர்,

மருத்துவர், நிமித்தர், அமைச்சர் என்னும் ஐந்து கூட்டத்தினரும் ஐம்பெருஞ் சபையிலே அடங்குவர். இச்சபைகளில் சந்தித்து தம் கடமைகளை ஆலோசிப்பதற்கு நகரங்களில் தனி மண்டபங்களிலிருந்தன. மூவேந்தரது ஆட்சியில் இவ்வகை ஒழுங்கு இருந்தது. அரசன் பெரும் ஆடம்பரத்தோடும் அதிகாரத்தோடும் கூடியிருந்தான். கூம்பு வடிவானதாகிய முடியையும் கையில் பொன் வளையல்களும் காலில் வீரக் கழல்களையும் அணிந்திருந்தான். அரண்மனையின் ஒரு பகுதி அரசிக்காகவும் அவளது பரிவாரங் களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தப்புரத்தில் ஆடவர் அனுமதிக்கப்படவில்லை. நீதி வழங்குவதற்குத் தனிக் கருமகாரர் இருந்தாலும் அரசனது தீர்ப்பே இறுதி முடிவாக இருந்தது. *(10 புள்ளிக்ள)*

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

எங்களுடைய அனுபவம் புலனுடைய அனுபவத்தைப் போல ஆழம் அல்லது தெளிவு உள்ளதாக இருப்பதில்லை. அதனாலும் நாம் அதனைத் தெளிவாக வெளிப்படுத்த முடியவில்லை. இத்தகைய நிலையிலிருக்கும் நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று அதனால் இன்பம் அடைய விரும்பின் ஒரு புலவனின் உதவியை நாடவேண்டியுள்ளது. ஆகாய வெளியில் நீந்திக் கொண்டு செல்லும் தண்மதியை காணும் போதெல்லாம் எம்முடைய உள்ளத்தில் ஓர் இனிய உணர்ச்சி உதிக்கின்றது. எனினும் அக்காட்சியின் கண் ஒரு புலவனுடைய உள்ளம் அழுந்துவது போல எம்முடைய உள்ளம் அழுந்துவதில்லை. கற்பனைத் திறனிலும் மொழியாற்றலிலும் புலவன் எம்மிலும் பன் மடங்கு சிறந்து விளங்குகின்றான். இதனால் அவன் கவிதை புனைய முயலுகின்றது. ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க வேண்டுமாயின் முதலில் அக்கவிதைக்கு ஏற்ற மனோ நிலையினை நாம் எம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு படிக்கும் போது அதன் பொருள், அனுபவம், உணர்ச்சி யாவற்றையும் அறிந்து கொள்ளமுடியும். கவிதையபை் படிக்கும் போது ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் இருத்தல் வேண்டும். அதன் கண் உள்ளத்தை தோயவிடும் போதுதான் புலவனுடைய அனுபவம் எமக்குப் புலனாகும். கவிதையைப் படித்து உணர்வதால் சொல்லற்கரிய இன்பத்தைப் பெறுகின்றோம். அமர வாழ்வை அடைகின்றோம். இதுதான் கவிதையால் நாம் பெறும் பயனாகும்.

i) புலவனால் எப்படிக் கவிதை புனைய முடிகின்றது?

ii) நாம் சிறந்த அனுபவம் ஒன்றைப் பெற்று அதனால் இன்பமடைய வேண்டுமானால் செய்ய வேண்டியது என்ன?

iii) ஒரு கவிதையை நாம் படித்து அனுபவிக்க என்ன செய்ய வேண்டும்?

iv) கவிதையாற் பெறும் பயன் யாது?

v) புலவனுக்கும் எமக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது? *(10 புள்ளிகள்)*

03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை வரைக.

i) உலக தமிழ் ஆய்வுகளும் உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளும்

ii) ஊடக சுதந்திரம்

iii) பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை நாடகத்துறைக்கு ஆற்றிய பணிகள்

iv) மும்மொழிப் பயிற்சியின் தேவையும் அதை அடைவதில் உள்ள பிரச்சினைகளும்.

v) வாழக்கல் *(20 புள்ளிகள்)*

## பகுதி - II

### பிரிவு 'அ'

04) (அ) சங்ககால இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த இலக்கிய வடிவங்கள் பற்றி சுருக்கமாக எழுதுக.

(ஆ) சங்ககால இலக்கிய மரபிலிருந்து சங்கமருவிய கால இலக்கிய மரபு வேறுபடுமாற்றினை விளக்குக.

(இ) காரைக்காலம்மையார், முதலாழ்வார் பாடல்கள் எவ்வாறு பல்லவர் கால இலக்கிய மரபிற்கு வழிகாட்டியது என துலக்குக. *(15 புள்ளிகள்)*

05) (அ) பல்லவர் கால பக்தி இலக்கியம் சோழர் காலக் காப்பியங்களில் செலுத்தும் செல்வாக்கினை எடுத்துக் காட்டுக.

(ஆ) சோழர் கால காப்பிய மரபு பிற்கால இலக்கியங்களில் பிரதிபலிக்கப்படுமாற்றினை விளக்குக.

(இ) நாயக்கர் கால காலப்பகுதியில் பெருமளவிலான சிற்றிலக்கியங்கள் எழுந்தமைக்கான காரணங்களை விளக்குக. *(15 புள்ளிகள்)*

06) (அ) இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் பிரதான பண்புகள் எவை?

(ஆ) அப்பண்புகள் முக்கியத்துவம் பெற்றமைக்கான சமூக அரசியல் காரணங்கள் எவை?

(இ) பாரதியிடம் இப்பண்புகள் வெளிப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக. *(15 புள்ளிகள்)*

### பிரிவு 'ஆ'

07) இலங்கையில் எழுந்த

(அ) புராண இலக்கியங்கள்

(ஆ) பள்ளு இலக்கியங்கள்

போன்றவற்றை வகைப்படுத்திக் காட்டி அவற்றின் சிறப்பியல்புகளைத் துலக்குக.
*(15 புள்ளிகள்)*

08) (அ) இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுக.

(ஆ) ஈழத்து உரைநடை இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகையின் பங்களிப்பினை எடுத்துக்காட்டுக.

(இ) இருபதாம் நூற்றாண்டு ஈழத்து கவிதை வளர்ச்சியில் பாவலர் துரையப்பா பிள்ளை ஆற்றிய பங்களிப்பினை எடுத்துக் காட்டுக. *(15 புள்ளிகள்)*